


அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் நகராட்சி மகிமைபுரத்தில், சிப்காட் தொழிற்சாலை அமைய உள்ள இடம் மற்றும் சாலை பணி உள்ளிட்டவைகளை, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர், பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், அரசு அலுவலர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத் தோழர்கள் உடன் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், கைக்குறிச்சி, ஸ்ரீ பாரதி மகளிர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் கல்விக் கடன் முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா ஆகியோர் 08.11.2024 அன்று மாணாக்கர்களுக்கு கல்விக் கடனுக்கான காசோலைகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் த.நந்தக்குமார், புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.எஸ்.கலைவாணி, ஸ்ரீ பாரதி கல்வி குழுமத் தலைவர் ஜி.தனசேகரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### முன்னாள் புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் பெரியண்ணன் 28ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி!

# புதுக்கோட்டை வடக்கு - தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!

புதுக்கோட்டை, நவ. 14 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:





புதுக்கோட்டை முன்னாள் மாவட்ட செயலாளரும், அரசு தலைமை கொறடாவுமான பெரியண்ணன் அவர்களின் 28ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாளை ( 15.11.2024 - வெள்ளிக்கிழமை) காலை 8 மணியளவில் புதுக்கோட்டை மாநகர தி.மு.க சார்பில் கீழ 2ம் வீதி நெல்லு மண்டி தெருவில் காலை சிற்றுண்டி வழங்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து காலை 9 மணியளவில் மேலக்கோட்டையில் உள்ள பெரியண்ணன் அவர்களின் சமாதிக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. இதனைத் தொடர்ந்து காலை 10 மணியளவில் இரத்த தான முகாம் நடைபெறுகிறது. இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் தமது அறிக்கையில் கூறி உள்ளனர்.

# சேலம் மத்திய மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!

சேலம், நவ. 14 -

சேலம் மத்திய மாவட்டக் கழகச் செய லாளரும் அமைச்சருமான இரா, இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



சேலம் மத்திய மாவட்டக் கழக பொது உறுப்பினர் கூட்டம். மத்திய மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் மாளிகையில் இன்று (14.11.2024 - வியாழக்கிழமை) காலை 11,00 மணி அளவில் மத்திய மாவட்டக் கழக அவைத்தலைவர் மு.சுபாசு தலைமையில் நடைபெற உள்ளது,

இந்த கூட்டத்தில் மத்திய மாவட்டக் கழக. மாநகரக் கழக நிர்வாகிகள். பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள். ஒன்றிய கழக. பகுதி கழக. பேரூ:ர் கழக நிர்வாகிகள். மாவட்டக் கழக பிரதிநிதிகள். மாநகர கோட்டக் கழக செயலாளர்கள். ஊராட்சி கிளைக் கழகச் செயலா ளர்கள். உள்ளாட்சி பிரதிநிதிகள். இளைஞர் அணி. வழக்கறிஞர் அணி. மாணவர் அணி. விவசாய அணி. விவசாய தொழிலா ளர் அணி.ய மகளிர் அணி. மகளிர் தொண்டர் அணி. தகவல் தொழில்நுட்ப அணி. வர்த்தகர் அணி. இலக்கிய அணி. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை. மருத்துவர் அணி. பொறியாளர் அணி. சிறுபான்மையினர் அணி. நெசவாளர் அணி. அயலக அணி. தொண்டர் அணி. சுற்றுச்சூழல் அணி. அமைப்பு சாரா ஓட்டுநர் அணி. விளையாட்டு மேம்பாட்டு அணி. தொழிலாளர் அணி. மீனவர் அணி. ஆதி திராவிடர் நலக்குழு ஆகிய சார்பு அணிகள் உள்ளிட்ட அனைத்து அணிகளைச் சேர்ந்த மாவட்ட. மாநகர. ஒன்றிய. பகுதி. பேரூர் அமைப்பாளர். துணை அமைப்பாளர்கள் என அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்,

பொருள் 1,இளம் தலைவர் துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழா

2, கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர்- அமைச்சர் இரா.இராஜேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### பட்டாசு விபத்து: குழந்தைகளின் கல்விச் செலவை அரசே ஏற்கும் என அறிவித்த

# தாயுமானவர் முதல்வருக்கு நெஞ்சார்ந்த பாராட்டுக்கள்!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. அறிக்கை!



சென்னை, நவ. 14 -

தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழகத்தில் குறிப்பாக விருதுநகர் மாவட்டத்தில் அமைப்புசாராத் தொழிலாக நடைபெற்று வரும் பட்டாசு தொழிற்சாலைகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதுண்டு. அதில் பணிபுரியும் தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்துடன் பலியாகி வருவதை பல ஆண்டுகளாக நாம் பார்த்து வருந்தியதுண்டு.

நெஞ்சை பிழிந்தெடுக்கும் இச்சம்பவங்களில் குழந்தைச் செல்வங்கள் தங்கள் பெற்றோரை அடையாளம் காண இயலாத வகையில் உடல்கள் சிதைந்து போன சம்பவங்கள் பல உண்டு. என்ன தான் இழப்பீடுகளை வழங்கினாலும் “தாயுடன் அறுசுவையோம், தந்தையுடன் கல்விபோம்” என்ற பழமொழியை முறியடித்து இதோ நான் இருக்கிறேன்.

அக்குழந்தைகளுக்கான கல்வியை அரசே ஏற்கும் எனத் தாயுமானவராக இருந்து அக்குழந்தைகள் வாழ்வில் ஒளியேற்றி வைத்த கழகத் தலைவர் - தமிழக முதல்வர் அவர்களை என்ன சொல்லி பாராட்டுவது.

எப்படி நன்றி சொல்வது என அகநெகிழ்ந்து, நெஞ்சம் நிறைந்து நல்வாழ்த்துக்களை தொ.மு.ச. பேரவையின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் கழகத் தலைவர் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து தமிழகத்திற்கு தொண்டாற்றிட பாராட்டி மகிழ்கின்றோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள கண்காணிப்பு பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் மறு மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது

இ.பொ.து.ந.க.எண்.எம்1 / 0136B / 2024
சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் பயன்பாட்டிற்கென 4 எண்ணிக்கையில் பள்ளி பேருந்துகள் (School Bus) கொள்முதல் செய்யும் பணி

முன்வைப்புத் தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி
ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் 28.11.2024 பிற்பகல் 3.00, மணி
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் 29.11.2024 பிற்பகல் 3.30 மணி
மேலும் விவரங்களுக்கு : https://tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 4903 / ஒப்பந்தப்புள்ளி / 2024 — கண்காணிப்பு பொறியாளர் (இ)


### விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகத்தினர்

# வாக்காளர் சரிபார்த்தல் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், நவ. 14 -

மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

வரும் (16.11.2024 - சனிக்கிழமை ) , 17.11.2024 - ஞாயிற்றுக்கிழமை ) மற்றும் (23.11.2024 - சனிக்கிழமை ) 24.11.2024 ( ஞாயிற்றுக்கிழமை ) ஆகிய நாட்களில் நடக்க உள்ள வாக்காளர் பட்டியல் திருத்த முகாம்களில் , விழுப்புரம் ( தெற்கு ) மாவட்டத்தைச் சேர்ந்த மாநில , மாவட்ட, ஒன்றிய, நகர , பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் , பாக முகவர்கள் ( BLA 2 ) , சார்பு அணி நிர்வாகிகள் என கழக நிர்வாகிகள் அனைவரும் அவரவர் பகுதியில் உள்ள வாக்குச்சாவடிகளில் , 01.01.2025 அன்று 18 வயது நிறைவடைபவர்களை புதிய வாக்காளர்களாக பதிவு செய்தல் , அந்தந்த பூத்களில் தகுதியற்ற வாக்காளர்களை நீக்குதல் , தகுதியான வாக்காளர்களை சேர்த்தல் போன்ற வாக்காளர் திருத்தப் பட்டியல் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.



இவ்வாறு விழுப்புரம் (தெற்கு ) மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி கேட்டுக்கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.அ. ஜின்னா
### நவம்பர் 14 (2022)



பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் உற்ற நண்பராக, சிறந்த வழக்கறிஞராக விளங்கியவர்.

சென்னை சட்டக் கல்லூரி தமிழ் மன்றத் துணைத் தலைவராக இருந்தபோது, எதிரெதிர் துருவங்களான பேரறிஞர் அண்ணாவையும், மூதறிஞர் இராஜாஜியையும் ஒரே மேடையில் அமர வைத்து இந்தி திணிப்பிற்கு எதிராக பேச வைத்தவர்.

கழகத் தலைவர் அவர்கள் , மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்ட போது, அவருடன் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

கழக மாநிலங்களவை உறுப்பினராக பணியாற்றி, கழகத்தின் குரலை நாடாளுமன்றத்தில் ஒலித்தவர்.

தமிழ்நாட்டிலேயே முதன்முதலாக பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலை வடித்து, அதனை சென்னை சட்டக் கல்லூரி வளாகத்தில் நிறுவியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# காரைக்கால் மாநில தொகுதி - அணிகளின் நிர்வாகிகள் கூட்டம்!

## ஏ.எம்.எச்.நாஜிம் எம்.எல்.ஏ.அறிக்கை!

காரைக்கால், நவ. 13 -


காரைக்கால் மாநில தொகுதி மற்றும் அணிகளின் நிர்வாகிகள் கூட்டம் 16.11.2024 அன்று காலை 10 மணிக்கு பாரதியார் வீதியில் உள்ள நேஷனல் மகாலில் நடைபெறுகிறது என்று காரைக்கால் மாநில கழக அமைப்பாளர் ஏ.எம்.எச்.நாஜிம் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.



எனவே சம்பந்தப்பட்ட அனைவரும் நவறாது பங்கேற்று கழக வளர்ச்சி மற்றும் பணிகள் குறித்து கருத்துகள் தெரிவிக்கும்படி அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.வி.என். சோமு
### நவம்பர் 14 (1997)



திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரர்களில் ஒருவராகவும், கழக அமைப்புச் செயலாளராகவும், சட்டத்துறைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

மத்திய பாதுகாப்புத் துறை இணையமைச்சராக பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சியில் துணை மேயராகப் பணியாற்றியவர்.

குழந்தைப் பருவத்திலேயே தன்னுடைய தாயாரோடு இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் 1938ஆம் ஆண்டு சிறைச் சாலையிலே இருந்தவர். அதுமுதல் கழகத்திற்காக பல தியாகங்கள் செய்து, சிறைக் கோட்டங்களுக்கு சென்று களம் பல கண்டு கழகத் தலைமை இடுகின்ற கட்டளைகளையெல்லாம் சிரமேல் தாங்கி அரும் தொண்டாற்றியவர்” என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**